## விமான விபத்து:

# மகாராஷ்டிர மாநில துணை முதலமைச்சர் அஜித் பவார் உயிரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன. 29 -**

**மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களும், அவருடன் பயணித்தவர்களும் விமான விபத்தில் உயிரிழந்த துயரச் செய்தி அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

மிகப் பெரும் துன்ப நிகழ்வான இதனை ஏற்றுக் கொள்ள நெஞ்சம் மறுக்கிறது.

திரு. சரத் பவார், திருமதி சுப்ரியா சுலே உள்ளிட்டவர்களுக்கும், இக்கொடும் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.1.2026) திருச்சிராப்பள்ளியில், தமிழர் தேசம் கட்சி நிறுவனத் தலைவர் கே.கே. செல்வகுமார் அவர்கள் அண்மையில் திருச்சியில் நடைபெற்ற தமிழர் தேசம் கட்சி மாநாட்டையொட்டி சந்தித்து பேசினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.

# மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் விமான விபத்தில் உயிரிழப்பு!

## அஜித் பவாருடன் விமானத்தில் பயணித்த 6 பேரும் உயிரிழந்தனர்!

*மும்பை, ஜன. 29 -*

*மகாராஷ்டிர மாநிலம் பாராமதியில் நடைபெறவுள்ள கட்சி கூட்டத்தில் பங்கேற்பதற்காக அம்மாநில துணை முதலமைச்சர் அஜித்பவார் சிறிய ரக விமானத்தில் நேற்று காலை புறப்பட்டார். பாராமதியில் காலை 8:45 மணிக்கு விமானம் தரையிறங்க முயன்றபோது விமானம் விபத்தில் சிக்கி தீப்பற்றி எரிந்தது. விமான விபத்தில் சிக்கிய அஜித் பவார், படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.*



*அவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.*

*இந்த விபத்தில் அஜித் பவாருடன் பயணித்த 6 பேரும் உயிரிழந்தனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானம் விபத்தில் சிக்கியதாக முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகி உள்ளது.*

*இந்த விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.*



4,000 ஆவது குடமுழுக்காக நடைபெற்ற சென்னை, பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று சிறப்பித்தார். உடன் மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், துரை. இரவிச்சந்திரன், பொ.ஜெயராமன், சி.கல்யாணி, சி.லட்சுமணன், கி.ரேணுகாதேவி, ஐ.முல்லை, இரா. ஹரிஹரன், க.சிவக்குமார், கி.பாரதிராஜா மற்றும் தமிழ்வேந்தன், புஷ்பராஜன், கிருஷ்ணகுமார், பா. சௌந்தரபாண்டி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், காட்டுப்பாக்கம் ஊராட்சி செந்தூர்புரம் முருகன் கோவில் தெரு பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தனியார் நிறுவன சமூக பங்களிப்பு நிதி திட்டத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பூங்கா பணிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி வைத்தார். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜே.கோவிந்தராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், செயற்பொறியாளர் சு.தணிகாசலம், மற்றும் திமுக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்

## டி.ஆர்.பாலு எம்.பி.- ஆர்.எஸ்.பாரதி - மேயர் பிரியா - துணை மேயர் மு. மகேஷ் குமார் - ப. குணாளன் பங்கேற்பு!

# ஆலந்தூர் தெற்குப் பகுதியில் ரூ.32.94 கோடி மதிப்பீட்டில் மண்டல அலுவலகம் - வட்டாரத் துணை ஆணையர் அலுவலகம்!

## அமைச்சர்கள் கே. என்.நேரு - தா.மோ. அன்பரசன் அடிக்கல் நாட்டித் துவக்கி வைக்கின்றனர்! என். சந்திரன் அறிக்கை!

சென்னை, ஜன.29-

ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் - 12வது மண்டல குழு தலைவர் என் சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதியில் முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் ரூபாய் 32 கோடியே 94 லட்சம் மதிப்பீட்டில் மண்டல அலுவலகம் (மண்டலம் 12) மற்றும் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அலுவலக கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா இன்று (29.1.2026 வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு புதுத் தெரு, ஆலந்தூரில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அமைச்சர் கே.என். நேரு, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு. மகேஷ் குமார், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன் ஆகியோர் கட்டிடப் பணிகளை அடிக்கல் நாட்டித் துவக்கி வைக்கின்றனர்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், தவறாமல் கலந்து கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் என். சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரையுடன் தொடங்கியது!

# நாடாளுமன்றத்தில் தமிழ்நாடு ஆளுநருக்கு எதிர்ப்பு!

## சட்டமன்றத்தில் ஆளுநர் உரையை ரத்து செய்யக் கோரி தி.மு.க. உள்ளிட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்!

புதுடெல்லி, ஜன. 29 -

நடப்பாண்டின் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நேற்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா முன்னிலை யில், மத்திய அரசின் கொள்கைகள் குறித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விவரித்துக் கொண்டிருந்தார்.

அப்போது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, மற்றும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் உறுப்பினர் முழக்கங்களை எழுப்பினர். ஆளுநர் உரையுடன் சட்டமன்ற கூட்டத் தொடர் தொடங்கும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.

இரண்டு கட்டங்களாக நடை பெறும் நாடாளுமன்ற கூட்டத்தொடர், நேற்று (ஜனவரி 28) தொடங்கி பிப்ரவரி 13 ஆம் தேதி வரை முதல் கட்டமாக நடைபெறவுள்ளது. அதன் பிறகு ஒரு மாத கால இடைவெளிக்குப் பிறகு இரண்டாவது கட்டமாக மீண்டும் மார்ச் 9ம் தேதி தொடங்கி ஏப்ரல் 2ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

வருகின்ற பிப்ரவரி 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதுவரை இந்திய வரலாற்றில் ஞாயிற்றுக்கிழமையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதே இல்லை. இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 345 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Brushable ceramic epoxy material for condenser 1600 NB left and right side inlet pipe line from 0 |
| 346 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Automatic Isoperibol Bomb Calorimeter along with complete accessories and Spares |
| 291 | மே.பொ / இ-I / வ.செ.அ.மி.நி-1 | Unit 1 2 3 Boiler tube puncture BD works during the period from date of handing over upto 31.03.27 |
| 225 | மே.பொ / இ-I / வ.செ.அ.மி.நி-2 | NCTPS II MI Circle MPM Unit I Mills 1A to 1J Carry out Break down maintenance of Mills and Feeder |
| 226 | மே.பொ / இ-I / வ.செ.அ.மி.நி-2 | NCTPS II MI Circle MPM Unit II Carry out breakdown maintenance works in the Mills |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/541/ஒப்பந்தப்புள்ளி/2026



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தகவல் தொழில் நுட்ப மையம்**

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 3060 / 2025 **மறு மின் ஒப்ப அறிவிப்பு**

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் முதுநிலை முறை மேலாளர் தகவல் தொழில்நுட்ப மையம் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**Identifying an agency for supply & installation of 50 Nos of Desktop Computers, 50 Nos Laser Printers, 50 Nos of UPS and 20 No's Laptops with 3 Years onsite warranty/support for GCC users under a Rate Contract valid for a period of 6 months**

| பணியின் மதிப்புத் தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| ரூ.48,94,796/- | ரூ.48,948/- |

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **12.02.2026 அன்று பிற்பகல் 2.00 மணி.** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **12.02.2026 அன்று பிற்பகல் 3.00 மணி.**

செ.ம.தொ.இ / 525 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **முதுநிலை முறை மேலாளர்**



**தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் பெயர் |
|---|---|---|
| OT No.15 | மே.பொ. / செ.மே.வ-I | Hiring Vehicle for 8 Nos |


மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tnpdcl.org, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in

செ.ம.தொ.இ/544/ஒப்பந்தப்புள்ளி/2026


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. வெற்றிகொண்டான்

### சனவரி 29 (2011)



பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – "பொழுது விடியும்" எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – 'கண்ணியம்'எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; "இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு –அவர்தம் தம்பியராம் எங்களோடு!".

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தாம்பரம் 49வது வார்டு

# முத்துரங்கம் பூங்காவில் - புதியதாக சிறுவர்கள் விளையாட்டுப் பூங்கா!

### டி.காமராஜ் தலைமையில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

*சென்னை, ஜன. 29-*

*தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பட்டு நிதியில் இருந்தும் மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் முத்துரங்க பூங்காவில் புதியதாக இறகு பந்து விளையாட்டு மைதானம் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்கா பணிகள் முடிக்கப் பட்டு புதிய பொலிவுடன் அமைக்கப் பட்டுள்ள பூங்காவை பொது மக்கள் பயன்பாட்டிற்கு இன்று (29/01/2026) மாலை 5:30 மணியளவில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி.காமராஜ் தலைமையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ அவர்கள் திறந்து வைத்திட உள்ளார்.*

*உடன் மாநகர மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ், மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் கலந்து கொள்ள உள்ளனர் ஆகையால் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி,*

*மகளிரணி மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் , மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள் கழக தோழர்களும், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.*



படப்பை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டி.மாணிக்கம் திருவுருவ படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். காஞ்சிபுரம் ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன் துணை தலைவர் ஏ.டி.எம்.வினோத் வார்டு உறுப்பினர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## டபுள் இஞ்சின் - டபுள் டிரைவர் - டப்பா வண்டி! - ட்ரபிள் பயணம்!

